DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. **CC No.80/2025**
**P.W**.1 (LW1)

| | |
|---|---|
| Name | : திரு.யுவராஜ் |
| Father/Husband Name | : திரு..வேலு |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.05.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது மாமல்லபுரத்தில் குடியிருந்து தனியார் ஓட்டலில் வேலை செய்து வருகிறேன். சாட்சி வேலு என்னுடைய அப்பா. சாட்சி குமாரி என்னுடைய அம்மா ஆவார்கள். கடந்த 14.01.2024 அன்று இரவு சுமார் 8 மணியளவில் என்னுடைய அப்பா கடையை மூடிவிட்டு வரும் போது எனது வீட்டின் அருகே கும்பலாக இருந்தார்கள். அதில் யாரோ என் அப்பாவை பார்த்து, அசிங்கமாக பேசி கட்டையால் எனது அப்பாவை சரமாரியாக தாக்கினார்கள். தடுக்க போன என அம்மா குமாரியை அசிங்கமாக பேசி கையாலும் கட்டையாலும் தாக்கி கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள். இந்த சம்பவத்தில் எனக்கு அப்பாவிற்கு வலது கண், வலது தோள்பட்டை, உதடு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. எனது அம்மாவிற்கு வலது கண், வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. அவர்கள் இருவரையும் சிகிச்சைக்காக பூஞ்சேரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன்.

யார் அவ்வாறு செய்தார்கள் என்று தெரியாது. இதுகுறித்து காவல் நிலையத்தில் அனுமானத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரிகள் மீது நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது. **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** ஆஜர் எதிரிகள் எங்கள் வீட்டருகே இருப்பதால் அவர்களுடன் சமாதானமாகிவிட்டதால் மேற்கொண்டு வழக்கை நடத்த விரும்பவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் கோரப்பட்டு அது நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

கடந்த 14.01.2024ம் தேதி இரவு 8.00 மணியளவில் எனது அப்பா வேலு மற்றும் அம்மா குமாரி ஆகியோர் மாமல்லபுரம் பஜாரில் உள்ள கடையை மூடிவிட்டு வீட்டிற்கு வந்தார்கள் என்றால் சரிதான். பக்கத்து வீட்டில் வசிக்கும் சிதம்பரம் என்பவர் பொது வழி சம்மந்தமாக பிரச்னை இருந்தது என்றால் சரிதான். அப்போது அந்த பிரச்னை சம்மந்தமாக எனது அப்பாவை சிதம்பரம் மற்றும் அவரது மகன் அஜய் ஆகியோர் அசிங்கமாக பேசி கையாலும், கட்டையாலும் எனது அப்பாவை தாக்கினார்கள் என்றால் சரியல்ல. தடுக்க போன என்னுடைய அம்மா குமாரி என்பவரையும் அசிங்கமாக பேசி கையாலும் கட்டையாலும் தாக்கினார்கள் என்றால் சரியல்ல. இது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்துவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் எதிரிகளுக்கு ஆதரவாக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. **CC No.80/2025**
**P.W**.2 (LW2)

| | |
|---|---|
| Name | : திரு.வேலு |
| Father/Husband Name | : திரு.தாயப்பன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.05.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது மாமல்லபுரத்தில் குடியிருந்து மாமல்லபுரம் பஜாரில் கடை வைத்து நடத்தி வருகிறேன். சாட்சி யுவராஜ் என்னுடைய மகன். சாட்சி குமாரி என்னுடைய மனைவி ஆவார்கள். கடந்த 14.01.2024 அன்று இரவு சுமார் 8 மணியளவில் நான் கடையை மூடிவிட்டு வரும் போது எனது வீட்டின் அருகே கும்பலாக இருந்தார்கள். அதில் யாரோ என்னை பார்த்து, அசிங்கமாக பேசி கட்டையால் என்னை சரமாரியாக தாக்கினார்கள். தடுக்கவந்த எனது மனைவி குமாரியை அசிங்கமாக பேசி கையாலும் கட்டையாலும் தாக்கி கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள். இந்த சம்பவத்தில் எனக்கு வலது கண், வலது தோள்பட்டை, உதடு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. எனது மனைவிக்கு வலது கண், வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. எங்களை இருவரையும் சிகிச்சைக்காக பூஞ்சேரி அரசு மருத்துவமனைக்கு என் மகன் அழைத்துச்

சென்றார். யார் அவ்வாறு செய்தார்கள் என்று தெரியாது. இதுகுறித்து காவல் நிலையத்தில் அனுமானத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரிகள் மீது என் மகன் புகார் கொடுத்தார். ஆஜர் எதிரிகள் எங்கள் வீட்டருகே இருப்பதால் அவர்களுடன் சமாதானமாகிவிட்டதால் மேற்கொண்டு வழக்கை நடத்த விரும்பவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>**சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் கோரப்பட்டு அது நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**</u>

கடந்த 14.01.2024 ம் தேதி இரவு 8.00 மணியளவில் நானும் மற்றும் எனது மனைவி குமாரியும் மாமல்லபுரம் பஜாரில் உள்ள கடையை மூடிவிட்டு வீட்டிற்கு வந்தோம் என்றால் சரிதான். பக்கத்து வீட்டில் வசிக்கும் சிதம்பரம் என்பவர் பொது வழி சம்மந்தமாக பிரச்னை இருந்தது என்றால் சரிதான். அப்போது அந்த பிரச்னை சம்மந்தமாக என்னை சிதம்பரம் மற்றும் அவரது மகன் அஜய் ஆகியோர் அசிங்கமாக பேசி கையாலும், கட்டையாலும் தாக்கினார்கள் என்றால் சரியல்ல. தடுக்க வந்த என்னுடைய மனைவி குமாரி என்பவரையும் அசிங்கமாக பேசி கையாலும் கட்டையாலும் தாக்கினார்கள் என்றால் சரியல்ல. இது குறித்து போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் எதிரிகளுக்கு ஆதரவாக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. **CC No.80/2025**
**P.W**.3(LW3)

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.குமாரி |
| Father/Husband Name | : | திரு.வேலு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

எதிரிகள் ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.05.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது மாமல்லபுரத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சி யுவராஜ் என்னுடைய மகன். சாட்சி வேலு என்னுடைய கணவர் ஆவார்கள். கடந்த 14.01.2024 அன்று இரவு சுமா்ா 8 மணியளவில் என் கணவர் கடையை மூடிவிட்டு வரும் போது எனது வீட்டின் அருகே கும்பலாக இருந்தார்கள். அதில் யாரோ என் கணவரை பார்த்து, அசிங்கமாக பேசி கட்டையால் சரமாரியாக தாக்கினார்கள். தடுக்கவந்த என்னை அசிங்கமாக பேசி கையாலும் கட்டையாலும் தாக்கி கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள். இந்த சம்பவத்தில் என் கணவருக்கு வலது கண், வலது தோள்பட்டை, உதடு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. எனக்கு வலது கண், வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. எங்களை இருவரையும் சிகிச்சைக்காக பூஞ்சேரி அரசு மருத்துவமனைக்கு என் மகன் அழைத்துச் சென்றார். யார் அவ்வாறு செய்தார்கள் என்று தெரியாது. இதுகுறித்து

காவல் நிலையத்தில் அனுமானத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரிகள் மீது என் மகன் புகார் கொடுத்தார். ஆஜர் எதிரிகள் எங்கள் வீட்டருகே இருப்பதால் அவர்களுடன் சமாதானமாகிவிட்டதால் மேற்கொண்டு வழக்கை நடத்த விரும்பவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் கோரப்பட்டு அது நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.</u>**

கடந்த 14.01.2024 ம் தேதி இரவு 8.00 மணியளவில் நானும் மற்றும் எனது கணவரும் மாமல்லபுரம் பஜாரில் உள்ள கடையை மூடிவிட்டு வீட்டிற்கு வந்தோம் என்றால் சரிதான். பக்கத்து வீட்டில் வசிக்கும் சிதம்பரம் என்பவர் பொது வழி சம்மந்தமாக பிரச்னை இருந்தது என்றால் சரிதான். அப்போது அந்த பிரச்னை சம்மந்தமாக என் கணவரை சிதம்பரம் மற்றும் அவரது மகன் அஜய் ஆகியோர் அசிங்கமாக பேசி கையாலும், கட்டையாலும் தாக்கினார்கள் என்றால் சரியல்ல. தடுக்க வந்த என்னை அசிங்கமாக பேசி கையாலும் கட்டையாலும் தாக்கினார்கள் என்றால் சரியல்ல. இது குறித்து போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் எதிரிகளுக்கு ஆதரவாக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.